**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**<u>அசல் வழக்கு எண். 74 /2022</u>**

2025 ம் ஆண்டு ஜீலை திங்கள் 21ம் நாள் Indian Oaths Act–1969 பிரிவு –6(2)ன் ஏற்பாட்டின்படி வாதி தரப்பு சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

(சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

நாள் : 21.07.2025

வா.சா.: PW1–

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்பையா | தந்தை/கணவர் பெயர் | : | மாரியப்பன் |
| கிராமம் | : | விலாப்பட்டி | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | 49 | தொழில் | | மளிகை கடை வைத்துள்ளேன். |

<u>முதல்விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. கடந்த 23.09.2010 ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் ஆன்லைன் நகல் **வா.சா.ஆ.1 ஆகவும்,**

2. தாவா 'அ'அட்டவணை சொத்தை பொறுத்து வாதி பெயரில் உள்ள நத்தம் சிட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.2 ஆகவும்,**

3. 4–ம் பிரதிவாதிக்கு வாதி கொடுத்த மனு நகல் **வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**(கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது. )**